


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 04 | Issue: 026 | 4 Pages | 26.08.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 026 | 4 பக்கங்கள் | 26.08.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |





**ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்**

**விளக்கம்: தீய சொற்களின் பொருளால் விளையும் தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமல் போகும்.**

# விமான நிலைய திட்டம் ரத்து: முதல்அமைச்சர் விஜய்யுடன் பரந்தூர் விவசாயிகள் சந்திப்பு




சென்னை, ஆக. 26
பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படுவதாக முதல்அமைச்சர் விஜய், சட்டசபையில் நேற்று அறிவித்தார். இதுதொடர்பாக அவர் கூறுகையில், பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள், இந்த அரசால் கைவிடப்படும். துறை சார்ந்த வல்லுனர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோர்களிடம் கலந்தாலோசித்து, விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்குப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாதவாறு புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான சில மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவ்விடங்களின் தொழில்நுட்ப ரீதியான சாத்தியக்கூறுகளை சம்பந்தப் பட்ட துறைகள் மூலம் விரிவான ஆய்வு மேற்கொண்டு, புதிய விமான நிலையத்திற்கான இடம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று தெரிவித்தார். தமிழக அரசின் இந்த அறிவிப்புக்கு அரசியல் கட்சி தலைவர்கள் வரவேற்பும், எதிர்ப்பும் தெரிவி த்துள் ளனர். இந்த நிலையில், பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படும்எனமுதல்அமைச்சர் விஜய் அறிவித்த நிலையில், பரந்தூர் வி வசாயிகள், விமான நிலைய எ திர்ப்புக் குழுவினர் தலைமை செ ய ல கத்தில் முதல்அமைச்சரை சந் தித்து நன்றி தெரிவித்தனர். அப்போது விவசாயிகள் முதல் அமைச்சர் விஜய்க்கு பச்சை துண்டு அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்.

# ஹைதி: ஆயுதக்குழுவினர் இடையே மோதல்: 42 பேர் பலி



போர்ட்ஓபிரின்ஸ், ஆக. 26
கரீபியன் தீவு நாடான ஹைதியில் கடந்த 2021ம் ஆண்டு அதிபர் ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டார். இதையடுத்து, அந்நாட்டில் அரசியல் நிலைத்தன்மையின்றி ஆயுத கும்பல்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. ஆயுத கும்பல்களின் வன்முறை பல மடங்கு அதிகரித்துள்ளது. மேலும் தலைநகர் போர்ட்ஓபிரின்ஸ் உள்ளிட்ட பல இடங்களை ஆயுத கும்பல்கள் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன. அதேவேளை, ஆயுதக்குழுவினர் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. இந்நிலையில், தலைநகர் போர்ட்ஓபிரின்சில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கெண்ட்ஸ்கப் நகரில் ஆயுதக்குழுவினர் இடையே நேற்று இரவு மோதல் ஏற்பட்டது. துப்பாக்கி சூடு, கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். இரு ஆயுதக்குழுவினர் இடையே நடந்த இந்த மோதலில் 42 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இந்த மோதல் குறித்து தகவலறிந்த பாதுகாப்புப்படையினர் அப்பகுதியில் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர்.

# ஓமன் அருகே சென்ற கச்சா எண்ணெய் கப்பல் மீது ஏவுகணை தாக்குதல்




மஸ்கட், ஆக. 26
ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. மேலும், ஹர்முஸ் ஜலசந்தியை மூடுவதாக ஈரான் அறிவித்தது. அதேவேளை, அனுமதியின்றி ஹர்முஸ் ஜலசந்தியை கடப்பதாக சரக்கு, கச்சா எண்ணெய் கப்பல்கள் மீது ஈரான் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதல்களில் கப்பல்களில் பயணிக்கும் மாலுமிகள் பலர் உயிரிழந்துள்ளனர். அதேபோல், ஏமனில் செயல்பட்டு வரும் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏடன் வளைகுடா பகுதியில் செங்கடலில் செல்லும் சரக்கு, கச்சா எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், ஓமன் அருகே அரபிக்கடலில் சென்ற கச்சா எண்ணெய் கப்பல் மீது இன்று ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. ஓமனின் அஷ் ஷிஷான் நகரில் இருந்து 9 நாட்டிகல் மைல் தொலைவில் ஹர்மூஸ் ஜலசந்தி அருகே இன்று அதிகாலை கச்சா எண்ணெய் ஏற்றிக்கொண்டு கப்பல் சென்றுகொண்டிருந்தது. அந்த கப்பலை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் கப்பலின் எஞ்சின் அறை முழுவதும் சேதமடைந்துள்ளது. இதையடுத்து, கப்பலில் இருந்த மாலுமிகள் ஓமன் கடற்படையால் பத்திரமாக மீட்கப்பட்டததாக தகவல் வெளியாகியுள்ளது. அதேவேளை, கச்சா எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடத்தியது யார்? என்ற விவரம் இதுவரை வெளியாகவில்லை.

# ஜெய்சங்கர்–புதின் சந்திப்பு: இந்தியாவுக்கு உரம் தொடர்ந்து வழங்குவதாக உறுதி



மாஸ்கோ ஆக. 26
ரஷ்யா அதிபர் புதினை இந்தியவெளியுறவுத்துறை அமைச்சர்எஸ். ஜெய்சங்கர் ரஷ்ய அதிபர் புதினை சந்தித்தார். இந்த சந்திப்பில் இந்தியாவுக்கு உரம் தொடர்ந்து வழங்குவதாக புதின்உறுதியளித்துள்ளார். இந்த சந்திப்பில் இந்தியா–ரஷ்யா இடையேயான வர்த்தகம், எரிசக்தி, உரம், அணுசக்தி, உயர்தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறுதுறைகளில்நிலவும் ஒத்துழைப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் இந்த சந்திப்பில் பிரதமர்நரேந்திரமோடியின்தனிப்பட்ட செய்தியை புதினிடம் ஜெய்சங்கர் வழங்கினார். இந்திய விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, இந்தியாவுக்குதொடர்ந்துஉரங்களைவழங்குவதற்கானநடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொண்டு வருவதாக புதின் தெரிவித்தார். உர ஏற்றுமதியை ரஷ்யா தொடர்ந்து அதிகரிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார். மேலும் இந்திய விவசாயிகளுக்கும் நாட்டின் விவசாயத் துறைக்கும்பிரச்சினையைத்தீர்க்கரஷ்யாதன்னால்இயன்றஅனைத்தையும் செய்து வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்தியா–ரஷ்யா இடையேயான வர்த்தகம் மீண்டும் அதிகரித்து வருவதாக புதின் கூறினார். இரு நாடுகளின் உறவுகளை தொடர்ந்து வலுப்படுத்துவதில் பிரதமர் மோடி முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார். ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் கிர்கிஸ்தானில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பிரதமர் மோடியை சந்திக்க இருப்பதாக புதின் தெரிவித்தார். பிரிக்ஸ் பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்கு அவரை வரவேற்பதற்கு மோடி ஆவலுடன் காத்திருப்பதாக ஜெய்சங்கர் புதினிடம் தெரிவித்தார்.

# திருப்பூர் 15 வேலம்பாளையம் சாக்கடை கழிவு நீரால் மக்கள் அவதி படுகின்றனர்



திருப்பூர் மாநகராட்சி 1வது மண்டலம் 15 வேலம்பாளையம் பகுதியில் சாலையில் இருபுறமும் சாக்கடை நீர் தேங்கி நின்று பொதுமக்கள் இருசக்கர வாகனத்தில் கூட செல்ல முடியாத அளவிற்கு நிலைமை அவ்வப்போது இருக்கிறது இதற்கு மாநகராட்சி அதிகாரிகள் ஒரு தீர்வை காண முடியாமல் திணறுகின்றனர் ஒரு சிறு மழை பெய்தாலும் கூட இந்தப் பகுதியில் 15 வேலம்பாளையத்தில் இருந்து வருவதற்கும் அனுப்பர்பாளையம்புதூரில்இருந்துசெல்வதற்கும்முடியாமல் கழிவு நீர் சூழ்ந்து விடுகின்றது தற்போது கழிவுநீர் சூழ்ந்துள்ளதால் அதை மாநகராட்சி நிர்வாகம் பொக்லைன் வைத்து சாக்கடையை சுத்தம் செய்து கழிவு நீரை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது

இந்த கழிவு நீர் தேக்கத்திற்கு காரணம் அனுப்பர்பாளையம் புதூர் பகுதியில் கழிவு நீர் செல்லும் கால்வாய் ஆக்கிரமிப்பில் உள்ளதாக கூறுகின்றனர் இந்த மெயின் ரோட்டில் இருந்து கழிவுநீர் செல்லும் பாதையை எங்கு எங்கு ஆகிரமிப்பு உள்ளது என்பதை மாநகராட்சி நிர்வாகம் ஆய்வு செய்ய வேண்டும் அதேபோல் 15 வேலம்பாளையம் பகுதியில் இந்த மழை நீர் வடிகால் ஓரத்தில் கட்டப்படும் பெரிய பெரிய காம்ப்ளக்ஸ் கடைகள் உள்ள கட்டிடங்கள் முன் பகுதியில் அடைத்து விடுகின்றனர் சாலையில் தேங்கும் தண்ணீர் அந்த மழை நீர் வடிகாலில் செல்ல முடியாத அளவிற்கு சாலையில் தேங்குகின்றது பெரும் மழை பெய்தால் அது ஒரு குளம் போல் தேங்கி வெள்ள காடாகிறது இருசக்கர வாகன ஓட்டிகள் ஊர்ந்து செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது இதனால் பள்ளங்களில் சிக்கி வண்டியோடு கீழே சாய்ந்து விழ வேண்டியது உள்ளது இது எல்லாம் தெரிந்த மாநகராட்சி அதிகாரிகள் காம்ப்ளக்ஸ் கட்டட உரிமையாளர்களுக்கு ஆதரவாக தான் உள்ளனர் ஒரு காம்ப்ளக்ஸ் கட்டிடம் கட்டி முடித்த பின்னர் அந்த இடத்தை ஆய்வு செய்ய வேண்டிய அதிகாரிகள் ஆய்வு செய்கின்றனரா இல்லையா என்று தெரியவில்லை அவர்கள் தங்கள் கட்டிடங்களுக்கு முன் பகுதியை மழை நீர் வடிகால் மேல் உயரப்படுத்திகட்டிவிட்டுகழிவுநீர்செல்லதடம்விடுவதில்லை இதனால் இந்த பள்ளமான பகுதியில் தேயும் மழை நீர் மற்றும் சாக்கடை கழிவு நீர் வடிகாலில் செல்வதற்கு ஏதுவாக ஆங்காங்கே வழித்தடங்களை விட வேண்டும் ஆனால் அது விடவில்லை என்பதால் தொடர்ந்து இது போன்ற நிகழ்ச்சிகள் நடந்து வருகிறது இதனால் வேலைக்கு செல்பவர்கள் பள்ளிக்கூடத்திற்கு குழந்தைகளை அழைத்துச் செல்லும் பெற்றோர்கள் அனைவரும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் மாநகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அந்தப் பகுதி ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது

# 20 சவரன் நகைகள் மீட்பு – உரியவரிடம் ஒப்படைப்பு



கொடுங்கையூரில் காணாமல் போன நகைகள் சிசிடிவி உதவியுடன் மீட்பு: மாதவரம் போலீசார் நடவடிக்கைசென்னை: கடந்த 23.05.2026 அன்று கொடுங்கையூரைச் சேர்ந்த மனுதாரர் லோஸ் நாயன் என்பவர், ஆந்திர மாநிலம் சித்தூரில் உள்ள தனது தாயார் வீட்டிற்கு செல்வதற்காக சுமார் 20 சவரன் நகைகளைபேக்கில்வைத்துக்கொண்டு பேருந்தில் பயணம் செய்துள்ளார். ஆந்திரா பேருந்து நிலையத்தில் இறங்கிய பின்னர், காலை சுமார் 8 மணியளவில் சித்தூர் செல்வதற்காக மற்றொரு பேருந்தில் ஏறியபோது, தன்னுடைய பேக்கில் வைத்திருந்த நகைகள் காணாமல் போனது தெரியவந்தது. இதுகுறித்து அளிக்கப்பட்ட புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். இதையடுத்து, சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் உள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களின் பதிவுகளைபோலீசார்ஆய்வுசெய்தனர். அதன்மூலம் நகைகளை திருடிச் சென்றதாகக் கூறப்படும் நபரை அடையாளம் கண்டு கைது செய்தனர். விசாரணையின்போது, திருடப்பட்ட நகைகளை
அந்த நபர் மண்ணில் புதைத்து வைத்திருந்தது தெரியவந்தது. தொடர்ந்து போலீசார் நகைகளை பறிமுதல் செய்து, குற்றவாளியை கைது செய்து நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர்.மீட்கப்பட்ட நகைகள் மாதவரம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் நீதிமன்றத்தில் மனுதாரர் தனது நகைகளை அடையாளம் காட்டி, உரிய ஆவணங்கள் மற்றும் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நகைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டார்.இதன்படி, சுமார் 20 சவரன் (சுமார் 158 கிராம்) தங்க நகைகள் மனுதாரரிடம் முழுமையாக நல்ல முறையில் ஒப்படைக்கப்பட்டன.இந்த நடவடிக்கையை மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் ஜி. கோபிநாத் தலைமையிலான போலீசார் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




திருப்பத்தூர்மாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்,நடைபெற்றமக்கள்குறைதீர்வு நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில், 03 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.30,500/ மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கு.ரவிகுமார்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.08.2026) வழங்கினார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.பூஷணகுமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.கண்ணன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

தினகனி



# நயினார் நாகேந்திரன் ஏன் கைது இல்லை? அமைச்சர் அருண்ராஜ் அதிரடி பதில்



சென்னை, ஆக. 26

முதல்வர் ஜோசப் விஜய் பற்றி மிகவும் அவதூறாக பேசுபவர்களை தவெக அரசு தொடர்ந்து கைது செய்து வருகிறது. ஏற்கனவே திமுக எம்.எல்.ஏக்கள் மார்க்கண்டேயன், அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதில் மார்க்கண்டேயன் பல நாட்கள் சிறையிலும் இருந்தார். அதேபோல் நடிகையுடன் இணைத்து முதல்வர் விஜயை நக்கலாக பேசியதால் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியை போலீசார் கைது செய்து தஞ்சாவூர் வரை அழைத்து சென்று விசாரணை செய்துவிட்டு இரவுதான் அவரை விடுதலை செய்தனர். அதேநேரம் 'அப்பாவை காணோம் என பேசுகிறார்கள்.. வீட்டிற்கு போய் அம்மாவிடம் கேட்டால்தானே அப்பா யாரென தெரியும்' என முதல்வர் விஜய் பற்றி மிகவும் அவதூறாக பேசிய நயினார் நாகேந்திரன் கைது செய்யப்படவில்லை

இதையடுத்து உதயநிதியை கைது செய்யும் தவெக ஏன் நயினார் நாகேந்திரனை கைது செய்யவில்லை.. பாஜகவுக்கும், தவெகவுக்கும் இடையே ஒரு உறவு இருக்கிறது' என்று திமுகவினர் சமூக வலைதளங்களில் பதிவிட்டனர்.. இந்நிலையில், ஒரு வார இதழில் இது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் அருண்ராஜ் 'எங்களுக்கு எந்த பயமும் இல்லை.. பாஜகவை நாங்கள் ஒரு கட்சியாகவே கருதவில்லை.. உதயநிதி ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவர்

அவருக்கென பொறுப்பு இருக்கிறது.. அதை அவர் மீறியதால் நடவடிக்கை எடுத்தோம்.. நயினார் நாகேந்திரனை கைது செய்தால் அதை வைத்து அவர்கள் அரசியல் செய்வார்கள்.. மதவாத அரசியலை தமிழகத்தில் வளர்ப்பதற்கு நாங்கள் உதவி செய்தது போல் ஆகிவிடும். அதை கருத்தில் கொண்டுதான் அவரை கைது செய்யவில்லை' எனக் கூறியிருக்கிறார்..

# கோதுமை ஏற்றுமதிக்கான தடையை நீக்கியது மத்திய அரசு

சென்னை, ஆக. 26

கோதுமை மாவு, மைதா, ரவை, ஆட்டா உள்ளிட்ட கோதுமை சார்ந்த பொருள்களை ஏற்றுமதி செய்ய விதிக்கப்பட்டிருந்த தடையைக் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு மத்திய அரசு நீக்கியுள்ளது. இந்தத் தடைநீக்கம் உடனடியாக நடப்பிற்கு வந்தது. உள்நாட்டுத் தேவைக்கான கையிருப்பு போதுமான அளவில் இருப்பதால், அரசாங்கம் இந்த முக்கிய முடிவை எடுத்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. இதன்மூலம் கோதுமை சார்ந்த அனைத்துப் பொருள்களின் ஏற்றுமதியும் தடையின்றி இயல்புநிலைக்குத் திரும்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, ரஷ்யா உக்ரேன் மோதல் காரணமாக அனைத்துலகச் சந்தையில் கோதுமை விலை கிட்டத்தட்ட 40 விழுக்காடுவரை கூடியது.

அத்துடன், கருங்கடல் பகுதியில் நிலவிய போரால் விநியோகத் தொடரும் பாதிக்கப்பட்டது. அவ்வழியாகத்தான் உலகில் நான்கில் ஒரு பங்கு கோதுமை வணிகம் நடந்துவந்தது. உலகளாவிய இந்த விநியோகத் தொடர் பாதிப்பை ஈடுசெய்யும் நோக்கில் இந்தியா ஏற்றுமதியை அதிகரித்தது. அதனால், இந்திய உள்நாட்டுச் சந்தையில் கோதுமை மற்றும் கோதுமை மாவின் விலை வெகுவாக உயர்ந்தது.

அதனைத் தொடர்ந்து, உணவுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, கடந்த 2022 ஜூலை 12ஆம் தேதி கோதுமை சார்ந்த பொருள்களின் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடைவிதித்தது.

பின்னர், இவ்வாண்டுத் தொடக்கத்தில் அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி, ஆண்டிற்கு ஐந்து மில்லியன் டன் வரை மட்டும் கோதுமை சார்ந்த பொருள்களை ஏற்றுமதி செய்யலாம் என அறிவிக்கப்பட்டது.

# எச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த்தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம்: கலெக்டர் தொடங்கி வைத்தார்



நாமக்கல், ஆக. 26

நாமக்கல் மாநகராட்சி, பூங்கா சாலையில் மாவட்ட கலெக்டர் லி.மதுபாலன், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில், எச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த்தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் 2026 ஐ தொடங்கி வைத்தார். சமூகத்தின் அனைத்து பிரிவினிடையே எச்.ஐ.வி / எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் முதன்மை கவனம் செலுத்தி தீவிரபடுத்தப்பட்ட பிரசாரம் 2026ஐ தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் வகுத்துள்ளது. அதன்படி ஆகஸ்டு 12 சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு ஆகஸ்டு 12 முதல் அக்டோபர் 12 வரை 60 நாட்களுக்கு நாமக்கல் மாவட்டத்தில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் குறித்து தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தினை செயல்படுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

மேலும், எச்.ஐ.வி/ எய்ட்ஸ் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளை கண்டறிந்து அப்பகுதிகளில் கிராமிய கலைநிகழ்சிகள் வாயிலாக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சி, மக்கள் அதிகம் கூடுகின்ற பகுதிகளில் கல்லூரி மாணவ / மாணவியர்கள் பங்குபெறும் விழிப்புணர்வு சைகைமொழி நடனம் (பிளாஷ் மோஃப்), மக்கள் பயன்படுத்தும் பயணியர் ஆட்டோக்களில் விழிப்புணர்வு வாசகங்கள் ஒட்டுதல் மற்றும் விழிப்புணர்வு மனிதசங்கிலி உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளது.

அதன்படி, இன்றைய தினம் மாவட்ட கலெக்டர் லி.மதுபாலன், நாமக்கல் மாநகராட்சியில் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில், எச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த்தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் 2026 மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து கலந்து கொண்டார். தொடர்ந்து, பயணியர் ஆட்டோக்களில் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்ட ஒட்டுவில்லைகளை ஒட்டினார். பொதுமக்கள், வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில் அமைக்கப்பட்ட அரங்கத்தினை திறந்து வைத்தார். மேலும், தீவிர விழிப்புணர்வு பிரச்சார கையெழுத்து இயக்கத்தினை கையெழுத்திட்டு தொடங்கி வைத்தார். தொடர்ந்து, மாவட்ட கலெக்டர் லி.மதுபாலன், தலைமையில் எச்.ஐ.வி / எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த்தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சார உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

மேலும், மாவட்ட கலெக்டர் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில் அமைக்கப்பட்ட சுய மதிப்பீட்டு செயலியினை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். தொடர்ந்து, தீவிர தகவல் தொடர்பு விழிப்புணர்வு இயக்கம் 3.0 ( 3.0) விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் முருகலட்சுமி, இணை இயக்குனர் (மருத்துவ பணிகள்) (பொ) மரு.வாசுதேவன், மாவட்ட நல அலுவலர் மரு.க.பூங்கொடி, மாவட்ட திட்ட மேலாளர் தாமோதரன், உட்பட நர்சிங் கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் விஜய் - ஆதவ் அர்ஜுனாவுக்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்

## சென்னை உயர்நீதி மன்றம் எச்சரிக்கை

சென்னை, ஆக. 26

முதல்வர் விஜய் தரப்புக்கு சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை...தேர்தல் வழக்கு: ரூ.50,000 அபராதம் விதிக்கப்படும் என முதல்வர் விஜய் தரப்புக்கு சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை திருச்சி கிழக்கு தொகுதியில் முதல் அமைச்சர் விஜய் வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜும் தேர்தல் வழக்கை தாக்கல் செய்தார்.

இதைபோல பெரம்பூர் தொகுதியில் முதல் அமைச்சர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து அந்தத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர் சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்தார். அதேபோல, வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோரும் முதல் அமைச்சர் விஜய்யின் வெற்றியை எதிர்த்து தேர்தல் வழக்கு தாக்கல் செய்தனர். இந்த தேர்தல் வழக்குகள் அனைத்தும் நீதிபதி வி.லட்சுமிநாராயணன் அமர்வில் விசாரணையில் உள்ளன. இதுதொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம், முதல் அமைச்சர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், இந்த வழக்குகள் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த நிலையில், முதல் அமைச்சர் விஜய் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படவில்லை. இதையடுத்து, அடுத்த முறை விசாரணையின் போது முதல் அமைச்சர் விஜய் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என்று நீதிபதி வி.லட்சுமிநாராயணன் எச்சரிக்கை விடுத்தார். மேலும் "கடந்த முறையே வழக்குகளை நீராகரிக்கோரி மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கூடுதல் அவகாசம் வழங்கப்படாது எனவும் ஆகஸ்ட் 27க்குள் மனு தாக்கல் செய்யுங்கள் என்றும் 6 மாதங்களில் தேர்தல் வழக்கை முடிக்க வேண்டும் என்பது விதிமுறை என நீதிபதி தெரிவித்து வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தார்.

# தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு கருத்தரங்கம்




தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகள் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

தென்காசி மாவட்டத்தில் தற்போது பரவி வரும் காய்ச்சலை எதிர்கொள்ளும் பொருட்டு, தமிழக சுகாதார செயலாளரின் ஆலோசனையின் படி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியும், தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையும் இணைந்து, டெங்கு காய்ச்சல் தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகள் பற்றிய கருத்தரங்கத்தை, இன்று தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கருத்தரங்கு கூடத்தில் வைத்து நடைபெற்றது. மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் ஜெஸ்லின் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கருத்தரங்கத்தில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி உதவி பேராசிரியர்கள் பொது மருத்துவர் டாக்டர் சிவசுந்தர், குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் முத்து ராமசுப்பிரமணியம், நுண்ணுயிரியல் பிரிவு மருத்துவர் காயத்ரி ஆகியோர் கலந்து கொண்டு "குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான டெங்கு காய்ச்சலின் மேம்பட்ட மேலாண்மை" குறித்து சிறப்புரையாற்றினார்கள்.

டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள், பரிசோதனை முறைகள், ஆரம்பகால சிகிச்சை, ஆபத்தான அறிகுறிகளை கண்டறிதல் மற்றும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவ அலுவலர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை கூடுதல் இயக்குனர் டாக்டர் குருநாதன் கந்தையா, மருத்துவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இணை இயக்குனர் நலப்பணிகள் மருத்துவர் பிரேமலதா மற்றும் சுகாதார அலுவலர் மருத்துவர் கோவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு உரை ஆற்றினார்கள்.

டெங்கு பரவலைத் தடுக்க வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வது, கொசுக்கள் உற்பத்தியாகும் சாத்தியக்கூறுகளை அகற்றுவது மற்றும் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுவது உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. டெங்கு காய்ச்சல் கருத்தரங்கில், தென்காசி மாவட்ட அனைத்து அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அலுவலர்கள் சுமார் 200 பேர் கலந்து பயன்பெற்றனர்.



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு, கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பேரங்கியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# முன்னாள் படைவீரர்கள் நலத் துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களுக்கான சுயதொழில், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர் கருத்தரங்கு கூட்டம்



புதுக்கோட்டை, ஆக. 26

புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத் துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களுக்கான சுயதொழில், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைவோர் கருத்தரங்கு கூட்டம் மாவட்ட கலெக்டர் மு.அருணா, தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கு கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

முன்னாள் படைவீரர்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக தங்களது இளமைப் பருவத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி, படைப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் தங்களது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஓய்வுதியம் பெற்றும் மற்றும் முன்னாள் படைவீரர் கழகம் (டெக்ஸ்கோ) வாயிலாக வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புகளைப் பெற்றிருந்தாலும், தங்களது வருமானத்தை மேலும் உயர்த்தி, குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் தொழில்முனைவோராக உருவாக வேண்டும். அந்தவகையில் முன்னாள் படைவீரர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, முன்னாள் படைவீரர்களுக்காகவே முதல்வரின் காக்கும் கரங்கள் என்ற சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.1 கோடி வரையிலான திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்கும் முன்னாள் படைவீரர்களுக்கு 30 சதவீதம் மூலதன மானியமும், வங்கிக் கடனுக்கான 3 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது.

எனவே, முன்னாள் படைவீரர்கள் இத்திட்டத்தினை முழுமையாகப் பயன்படுத்தி, தங்களுக்கு விருப்பமான தொழில்களைத் தொடங்கி, சுயதொழில் வாயிலாக நிலையான வருமானத்தை உருவாக்கி, தங்களது குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், இத்திட்டத்தின் கீழ் பெரும்பாலான முன்னாள் படைவீரர்கள் பயன்பெற வேண்டும்.

மேலும், சுயதொழில் மற்றும் தொழில் தொடங்குவதற்கு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், அவற்றின் மூலம் வழங்கப்படும் மானியங்கள், வங்கிக் கடன் வசதிகள்,

தகுதிகள் மற்றும் விண்ணப்பிக்கும் நடைமுறைகள் குறித்து முன்னாள் படைவீரர்கள் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். இதற்காக, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், மாவட்ட தொழில் மையம், தாட்கோ உள்ளிட்ட தொடர்புடைய துறைகளை அணுகி, தங்களுக்கு ஏற்ற தொழில் வாய்ப்புகள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் குறித்து உரிய ஆலோசனைகளையும் தெளிவான வழிகாட்டுதல்களையும் பெற்று கடன் திட்டங்களைப் பயன்படுத்தி தொழில் தொடங்கி பயன்பெற வேண்டும் என மாவட்ட கலெக்டர் மு.அருணா தெரிவித்தார்.

# சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், சீப்பாலக்கோட்டை ஊராட்சியில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்: கலெக்டர் துவக்கி வைத்தார்



தேனி, ஆக. 26

தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், சீப்பாலக்கோட்டை ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் இரா.வைத்திநாதன், தலைமையேற்று கால்நடைகளுக்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் கால்நடைகளுக்கான சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தேனி மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 18 முகாம் வீதம் 144 முகாம்கள் நடைபெற உள்ளது.

இதன்மூலம் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம், தடுப்பூசி, செயற்கை கருவுற்றல் உள்ளிட்ட மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படும். தேனி மாவட்டத்தில் ஆடு, மாடு, கன்றுகள் மற்றும் கோழிகள் என 2,50,000/க்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன்பெறும் வகையில் இம்முகாம் நடைபெறுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் காலை முதல் மாலை வரை மருத்துவ முகாம் நடைபெறும். கால்நடை வளர்ப்போர் தவறாமல் கால்நடைகளை முகாம்களுக்கு அழைத்துவந்து மருத்துவப் பரிசோதனை செய்து பயன்பெற்றிட வேண்டும் என மாவட்ட கலெக்டர் இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் இணை இயக்குநர் கிரிஜா, துணை இயக்குநர் சுகுமார், உதவி இயக்குநர்கள் சிவரத்தினம், ஈஸ்வரன், பாஸ்கரன் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# த.வெ.க கழக மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்திடம் மாவட்ட கழக துணைச் செயலாளர் வெற்றி சேனல் லோகோ பற்றி அனுமதி கேட்டு வாழ்த்துப் பெற்றனர்




ஓசூர்,ஆக 26
கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சேனல் சில நாட்களில் வெளியாக உள்ளது. கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கழக துணைச் செயலாளர் அன்வர் பாஷா அவர்கள் மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்திடம் நேரில் சென்று கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் வெற்றி சேனல் லோகோ பற்றி அனுமதி கேட்டு அவர்களிடம் வாழ்த்துப் பெற்றனர். இவர்களுடன் பிரபல பிக்பாஸ் நடிகர் தினேஷ் கோபாலசாமி அவர்களும் உடன் இருந்தனர்.

# அரியலூர் மாவட்டத்தில் பட்டா மாறுதல் ஆணை: பயனாளிக்கு கலெக்டர் வழங்கினார்




அரியலூர், ஆக. 26
அரியலூர் மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் பயனாளிக்கு ரயத்துவாரி புஞ்சை நிலம் என வகைப்பாடு திருத்தம் செய்யப்பட்ட பட்டாவினை மாவட்ட கலெக்டர் ந.மிருணாளினி, வழங்கினார்.
அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், கடந்த வாரம் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அளிக்கப்பட்ட மனுவிற்கு தீர்வு கண்டு, உரிய ஆவணங்களின் அடிப்படையில் அரியலூர் வட்டம், அழகியமணவாளம் கிராமத்தில் வசிக்கும் ஜெயராக்கினி க/பெ.நெப்போலியன் என்பவருக்கு ரயத்துவாரி புஞ்சை வகைப்பாடு என கிராம கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்ட கணினி வழி பட்டாவினை மாவட்ட கலெக்டர் ந.மிருணாளினி, வழங்கினார்.
இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா. மல்லிகா, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் பிரேமி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# சின்னாளபட்டி கீழக்கோட்டை ஸ்ரீமது இராமலிங்க சௌடேஸ்வரி கோவில் பெரியசாமி கும்பிடு விழா



சின்னாளபட்டி, ஆக 26
திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி கீழக்கோட்டையில் அமைந்துள்ளது அருள்மிகு ஸ்ரீமது இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவில். நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த இக்கோவிலின் பெரியசாமி கும்பிடு விழாவை முன்னிட்டு கடந்த 1 வாரத்திற்கு முன்பு கீழக்கோட்டை தேவாங்கர் சமுதாய மக்கள் அனைவரும் விரதம் இருந்து காப்பு கட்டிக்கொண்டனர். நேற்று செவ்வாய்கிழமை (25.08.2026) அம்மனை கோவிலுக்கு அழைத்து வரும் அசுவ வாகனம் (குதிரை) வாங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கீழக்கோட்டை முனியப்பன் கோவிலில் ஜமீன்தார் பி.முத்துராஜ் காத்திருக்க மேளதாளத்துடன் வந்த விழாக் கமிட்டியார்கள் முனியப்பனை வணங்கிய பின்பு ஜமீன்தாருக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அதன் பின்னர் அசுவ வாகனத்திற்கு ஆடைகள் அணிவிக்கப்பட்டு ஜமீன்தார் குதிரையை தானமாக கொடுக்க அம்மன் கரகம் எடுக்க அனைவரும் பிருந்தாவன தோப்பிற்கு பக்தர்கள் ஊர்வலமாக சென்றனர். அங்கு அம்மன் கரகம் (ஸ்ரீமது இராமலிங்க சௌடேஸ்வரி) வடமாநிலமான ஜம்முதாவியில் உள்ள அம்;மனைப் போல் கத்தியில் பூ சுற்றி அதில் காதோலை, கருகமணி. வைத்து அம்மன் கரகம் அலங்கரிக்கும்போது தேவாங்கர் சமுதாயத்தை சேர்ந்த இளைஞர்கள் மார்பில் கத்தி போட்டு அம்மனை வேண்டிக்கொண்டனர். அதன் பின்னர் அம்மன் கரகம் முன்பு அசுவ வாகனத்தில் ஜமுதாடும் அதனைத் தொடர்ந்து அம்மன் கரகமும் கோவிலுக்கு அழைத்து வரப்பட்டது. பிருந்தாவன தோப்பிலிருந்து அம்மன் கரகம் வரும்போது வழி நெடுகிலும் கோவிலுக்கு வரும் வரை பக்தர்கள் மார்பில் கத்தி போட்டவாறு சௌடம்மா தீசிக்கோ! சௌடம்மா தீசிக்கோ!! என்றவாறு தங்களது மார்பிலும், கையிலும் கத்தி போட்டவாறு வேண்டிக்கொண்டனர். அதன் பின்னர் அம்மன் கரகத்துடன் குதிரை வாகனம் கோயில் உள்ளே நுழையும்போது ஓம்சக்திபராசக்தி, ஓம்சக்திபராசக்தி என பக்தர்கள் வழிபாடு செய்தனர். அதனைத் தொடர்ந்து பொது அன்னதானம் நடைபெற்றது. மாலை 4 மணியளவில் திருவிளக்கு போட்டியும், இரவு 8.30 மணியளவில் அலகு குத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை தேவாங்கர் மகாஜனசபை தலைவர் ஏ.இராமலிங்கம், செயலாளர் முருகன், பொருளாளர் மீனாட்சி சுந்தரம், நாட்டாமை வாசுதேவன், பெத்தனகாரார் எஸ்.முருகன், கௌரவத்தலைவர் எஸ்.கணேஷ்பிரபு, இளைஞர் அணியைச் சேர்ந்த தலைவர் தேவா, செயலாளர் வீரேஸ்குமார், பொருளாளர் கோபிநாத் தலைமையிலான விழாக்கமிட்டியார்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# அரும்பாக்கம் பகுதியில் நகைக்கடை ஊழியர் தவறவிட்ட பணம் ரூ.34,000/ அடங்கிய பையை காவல் குழுவினர் கண்டெடுத்து உரிய விசாரணைக்குப் பின்னர் ஒப்படைக்கப்பட்டது




சென்னை, ஆக. 26
சென்னை பெருநகர காவல், 8 அரும்பாக்கம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கருப்பசாமி என்பவர் கடந்த 23.08.2026 இரவு, அரும்பாக்கம், என்.எஸ்.கே. நகர், சிக்னல் சந்திப்பில் பணியிலிருந்தபோது, அங்கு கேட்பாரற்று ஒரு பை இருந்ததை கண்டெடுத்து பார்த்தபோது, அதில் பணம் ரூ.34,000/, நகை சீட்டு தொடர்பான 40 சிறிய புத்தகங்கள் மற்றும் வங்கி ஏடிஎம் கார்டு அடங்கிய மணிபர்ஸ் இருந்ததால், சிறிது நேரம் காத்திருந்து, யாரும் பையை கேட்டு வராததால், மேற்படி பணம் அடங்கிய பையை 8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். 8 அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் பையிலிருந்த அடையாளங்களை கொண்டு விசாரணை செய்ததில், அண்ணா நகரில் உள்ள ஒரு நகைக்கடை ஊழியர் கடையின் வசூல் பணம் அடங்கிய பையை இருசக்கர வாகனத்தில் செல்லும் போது தவறவிட்டது தெரியவந்ததின்பேரில், சுமார் ஒரு மணி நேரத்திற்குள் மேற்படி பணம் அடங்கிய பையின் உரிமையாளர் மோகன் என்பவரை நகைக்கடை மேலாளருடன் வரவழைத்து விசாரணை செய்தனர். விசாரணையில் மோகன், வ/26 என்பவர் அண்ணா நகரில் உள்ள ஒரு நகைக்கடையில் மார்க்கெட்டிங் பிரிவில் கலெக்ஷன் ஏஜெண்டாக வேலை செய்து வருவதாகவும், மோகன் கடந்த 23.08.2026 அன்று வாடிக்கையாளர்களிடம் நகை சீட்டு பணத்தை வசூல் செய்துவிட்டு இரவு கடைக்கு செல்லும் வழியில் அரும்பாக்கம், என்.எஸ்.கே. சிக்னலில் தவறவிட்டது தெரியவந்தது. அதன்பேரில், மேற்படி நகைக்கடையின் மேலாளர் மற்றும் மோகன் ஆகியோரிடம் விசாரணை செய்து, அவர்கள் கூறிய அடையாளங்களை வைத்து உறுதி செய்யப்பட்ட பின் பணம் ரூ.34,000/ மற்றும் ஆவணங்கள் அடங்கிய பை அதன் உரிமையாளர் மோகன் வசம் ஒப்படைக்கப்பட்டது. சாலையில் கிடந்த பணம் அடங்கிய பையை துரிதமாக செயல்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைத்து உரியவரிடம் ஒப்படைக்க உதவிய சிறப்பு உதவி ஆய்வாளர் கருப்பசாமியை காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்குப் பருவமழை 2026 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்



மயிலாடுதுறை, ஆக. 26
மயிலாடுதுறை மாவட்டத்தில் எதிர்வரும் வடகிழக்குப் பருவமழை 2026 காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், பேரிடர் பாதிப்புகளை குறைக்கவும் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தயார் நிலை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட கலெக்டரின் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப் பணித்துறை நீர்வள ஆதாரம், நகராட்சி மற்றும் பேரூராட்சிகள், மின்சாரத் துறை, பொது சுகாதாரத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, காவல்துறை, மீன்வளத்துறை, பள்ளிக்கல்வித் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைத்துறை மற்றும் கூட்டுறவு ஃ நுகர்பொருள் வழங்கல் உள்ளிட்ட தொடர்புடைய துறைகளின் சார்பில், மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள வெள்ளப் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள், தாழ்வான பகுதிகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய கிராமங்கள் குறித்த விவரங்களை புதுப்பித்து, அவற்றின் அமைவிடங்களை உறுதி செய்யவும், அவசரகால தங்குமிடங்கள் மற்றும் நிவாரண மையங்களில் குடிநீர், கழிப்பறை, மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யவும் மாவட்ட கலெக்டரால் அறிவுறுத்தப்பட்டது.
மேலும், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மைத்துறை மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறையினர் முறையே வெள்ளத்தால் பாதிக்கக் கூடிய கால்நடைகள், விவசாயப் பகுதிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தேவைகளை முன்கூட்டியே கணித்து, தேவையான மருந்துகள், கால்நடைத் தீவனம், விதைகள், அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை போதுமான அளவில் இருப்பு வைக்க அறிவுறுத்தப்பட்டது அனைத்து துறை அலுவலர்களும் தங்களது துறையின் கீழ் உள்ள முக்கியமான ஐந்து பாதிக்கப்படக்கூடிய இடங்கள், மேற்கொள்ளப் பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், நிலுவையில் உள்ள பணிகள், பொறுப்பான அலுவலர், பணிகளை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு, அவசரகால மனிதவளம், வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் இருப்பு மற்றும் அவற்றின் செயல்திறன் ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்து, மாவட்ட நிர்வாகத்திற்கு தேவையான தகவல்களை உடனுக்குடன் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

வடகிழக்குப் பருவமழை 2026 காலத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து, 24 மணி நேரமும் தயார் நிலையில் இருந்து, எவ்வித அவசரநிலையையும் விரைந்து எதிர்கொள்ளும் வகையில் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.
மேலும், பருவமழை காலத்தில் ஏற்படும் இடையூறுகள் குறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறையினை 1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் புகார் அளிக்கலாம் எனவும் மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்கள்.
இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.ஸ்னேகா ப்ரியா, மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கொடி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் முத்துவடிவேல், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் விஷ்ணுபிரியா, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் பாலமுருகன் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்புகலூரில் வெறிநாய் கடித்து பசுமாடு சாவு



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருப்புகலூர் ஊராட்சி அண்ணா நகர் மெயின்ரோடு பகுதியை சேர்ந்தவர் சக்திவேல் (வயது 52) விவசாயி. இவர் விவசாய பணிகளை செய்து கொண்டு வீட்டில் மாடுகள் வளர்த்து வருகிறார். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வயல் வெளியில் மேய்ச்சலுக்காக விடப்பட்ட பசுமாட்டை அப்பகுதியில் சுற்றித்திரியும் வெறிநாய் ஒன்று கடித்துள்ளது. இதில் வெறி நோயால் பாதிக்கப்பட்ட மாட்டுக்கு சக்திவேல் கால்நடை மருத்துவரை அழைத்து சிகிச்சை அளித்துள்ளார். ஆனால் மாடு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக நேற்று உயிரிழந்தது. உயிரிழந்த மாட்டை திருப்புகலூர் கால்நடை உதவி மருத்துவர் இளவரசி பிரேத பரிசோதனை செய்து அங்கே குழிதோண்டி புதைத்தனர்.

# விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்தின் சென்னை பையனூரில் அமைந்துள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழா



விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்தின் சென்னை பையனூரில் அமைந்துள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழா நிகழ்ச்சி பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டது. முன்னதாக நிகழ்ச்சிக்கு வருகை புரிந்திருந்தோரை கல்லூரியின் பொறுப்பு இயக்குனர் முத்துராஜ் அவர்கள் வரவேற்று பேசினார் . கல்லூரியின் தர கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்உதவிபேராசிரியைபானுஅவர்கள் தொடக்க உரையாற்றினார்.
இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக செங்கல்பட்டு மாவட்ட மகாபல்லிபுரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அறிவழகன் அவர்கள் பங்கேற்று மாணவர்கள் கல்லூரி காலங்களை சரியான வகையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேறும் வகையில் ஊக்கமளித்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராகவிநாயகாமிஷன்பல்கலைக்கழகத்தின் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிகளின் டீன் பேராசிரியர்டாக்டர்செந்தில்குமார்அவர்கள்பங்கேற்று மாணவர்கள் கல்வியோடு சேர்ந்து தங்களின் தனித் திறமைகளையும் தொழில்துறை சார்ந்த திறன்களையும் வளர்த்துக் கொள்வதன் அவசியம் குறித்து மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார். மேலும் விநாயகா மிஷன் சட்டக் கல்லூரியின் நிர்வாக டீன் சித்தார்த் அவர்களும் பங்கேற்று சிறப்பித்தார் தொடர்ந்து தற்போது கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களும் பங்கேற்று தங்களின் கல்லூரி அனுபவங்களையும், செயல்பாடுகளையும் பகிர்ந்து கொண்டனர். முடிவில் கல்லூரியின் கல்வியில் ஒருங்கிணைப்பாளர் உதவி பேராசிரியை டாக்டர். இந்திரா நன்றியுரை வழங்கினார். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் கல்லூரியின் அனைத்து பேராசிரியர்களும் அலுவலக பணியாளர்களும் செய்திருந்தனர்.

# திருப்புகலூரில் மக்கள் நேர்காணல் முகாம்




நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திருப்புகலூர் ஊராட்சியில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில் திருப்புகலூர், ஏனங்குடி, திருக்கண்ணபுரம், திருச்செங்காட்டங்குடி, புதுக்கடை, கயத்தூர் உள்ளிட்ட 6 வருவாய் கிராமங்களுக்கான மக்கள் நேர்காணல் முகாம் நேற்று நடைபெற்றது. முகாமிற்கு நாகை தாசில்தார் ராஜ்குமார் தலைமை தாங்கினார். மண்டல துணை தாசில்தார் கிருஷ்ணன், வருவாய் ஆய்வாளர் குமுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் பெரும்பாலான மனுக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, மயான வசதி, சமுதாய கூடம், ஆற்றின் கரையோரங்களில் தடுப்பு சுவர் அமைத்து தரக்கோரி 100க்கும் மேற்பட்ட மனுக்களை அளித்தனர். இந்நிகழ்ச்சியில் கிராமநிர்வாக அலுவலர்கள் லெட்சுமி, ஜெகதீசன், ஊராட்சி செயலர் ரவிச்சந்திரன் மற்றும் கிராமஉதவியாளர்கள், அரசுஅலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தின கனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
26.08.2026

# நீலகிரி மாவட்டம் மசினகுடியில் இலவச கண் சிகிச்சை முகாம்: 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



கூடலூர் அருகே மாசினகுடியில்

நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் தி சில்ரன், மசினகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மசினகுடி கிளை நூலகம் ஆகியவை இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை மற்றும் கண் கண்ணாடிகள் வழங்கும் முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் மசினகுடி ஒருங்கிணைப்பாளர் தேவஞானம் தலைமை தாங்கினார்.

மசினகுடி கிளை நூலகர் கபிலன், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல்பாதுகாப்புமையசெயலாளர் சிவசுப்பிரமணியம், மசினகுடி அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் கிருபா நந்தினி ஆகியோர் முகாமை தொடங்கி வைத்தனர். உதகை அரசு மருத்துவக்கல்லூரி கண் மருத்துவக் குழு முதுநிலை மருத்துவர் விஜயஸ்ரீ, மருத்துவர் திலீப், கூடலூர் அரசு மருத்துவமனை கண் மருத்துவர் தாவா மற்றும் மருத்துவக் குழுவினர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டனர்.

முகாமில் கண்புரை, கண் நீர் அழுத்த நோய், மாலைக்கண் நோய், மாறுகண் நோய், தூரப்பார்வை, கிட்டப்பார்வை உள்ளிட்ட பல்வேறு கண் பாதிப்புகள் குறித்து பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. முகாமில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து கொண்டனர். இதில் 30க்கும் மேற்பட்டோருக்கு கண்புரை பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. அவர்களில் 20 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்காக உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கண்புரை பாதிப்பு உள்ளவர்களுக்கு உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தரமான IOL லென்ஸ் பொருத்தி இலவசமாக அறுவை சிகிச்சை செய்து தரப்படும்.

45 வயதிற்கு மேற்பட்டோரில் கிட்டப்பார்வை குறைபாடு கண்டறியப்பட்ட 66 பேருக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும், இதர கண் பாதிப்புகள் மற்றும் மேல் சிகிச்சை தேவைப்படுவோர் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டனர்.

முகாமில் மசினகுடி ஆஷா பணியாளர் கவிதாகலந்துகொண்டுபொதுமக்களுக்கு ரத்த அழுத்தம் மற்றும் ரத்தச் சர்க்கரை அளவை பரிசோதனை செய்து வழங்கினார்.

முகாமிற்கு முன்னதாக கண் தான இரு வார விழாவை முன்னிட்டு கண் தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில்கண்மருத்துவர்கள் விஜயஸ்ரீ மற்றும் திலீப் ஆகியோர் பொதுமக்களுக்கு கண் தானத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து மசினகுடி கிளை நூலகர் கபிலன் தன் கண்களை தானம் செய்வதற்கானபதிவைசெய்துதொடங்கி செய்தார். தொடர்ந்து முகாமில்பங்கேற்ற 35 பேர் கண் தானம் செய்ய பதிவு செய்து கொண்டனர்.

# அம்பலூர் ஊராட்சியில் தூய நெஞ்சக் கல்லூரி மாணவர்கள் சார்பில் போதைப் பொருள் விழிப்புணர்வு பேரணி



திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) முதுகலை வணிக மேலாண்மை மற்றும் ஆராய்ச்சித் துறை மற்றும் அம்பலூர் ஊராட்சி மன்றம் இணைந்து நடத்திய "வெளிக்கள சேவை 2026" சிறப்பு சமூக விழிப்புணர்வு முகாம், ஆகஸ்ட் 24, 2026 அன்று அம்பலூர்கிராமத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்தது.

இந்நிகழ்ச்சிக்குத்தூய நெஞ்சக்கல்லூரியின்முதுகலை வணிக மேலாண்மை மற்றும் ஆராய்ச்சித் துறைத் தலைவர் முனைவர் S. சசிகுமார் தலைமையில் சிறப்பு விருந்தினராக அம்பலூர் ஊராட்சி மன்ற தலைவர் திரு. A.P.முருகேசன் அவர்கள் கலந்து கொண்டு போதைப்பொருள்ஒழிப்பு மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புனர்வு பேரணி மற்றும் 10000 பணவிதைகள் நடும் பணியை துவக்கி வைத்தார்கள்.

முகாமின் முக்கியச் செயல்பாடுகள்:

போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி:

இளைய சமுதாயத்தைப் போதைப்பழக்கத்திலிருந்து காக்கும் நோக்கில், மாணவர்கள்மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்ற போதை எதிர்ப்பு விழிப்புணர்வு பேரணி கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியே நடைபெற்றது.

கிராமத்துாய்மைப்பணி:கிராமமக்களின்சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், அம்பலூர் ஊராட்சிப் பகுதிகளில் மாணவர்கள் தீவிர தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

பாலாற்றங்கரையில் பசுமை முயற்சி: சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கும் நோக்கில், பாலாற்றங்கரையின் கரையோரங்களில் மரக்கன்றுகள்நடும் பணிகளோடு, ஏராளமான பனைமர விதைகளும் நட்டப்பட்டன. இதில் துணை வட்டாரவளர்ச்சி அலுவலர் ஹேமசந்திரன்மற்றும் துணைதலைவர், வார்டு உறுப்பினர்கள்

ஒருங்கிணைப்பு மற்றும் பங்கேற்பு:

இச்சமூக சேவை முகாமினைப் பேராசிரியர்கள் முனைவர் J. சசிகாந்த், பேராசிரியர் G. லாரன்ஸ், பேராசிரியர் Y. ஜோசப் சந்தோஷ்குமார், முனைவர் S. ரஞ்சிதா மற்றும் முனைவர் A. ராகினி ஆகியோர் முன்னின்று ஒருங்கிணைத்தனர்.

இச்சேவை முகாமில் கல்லூரி மாணவர்களும், ஊர் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (26.08.2026)

மேஷம்: இன்று நாள் முழுவதும் உற்சாகம் நிறைந்திருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

ரிஷபம்: குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபச் செய்திகளும் வந்து சேரும். நிதி நிலைமை சீராக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக் கும்.

மிதுனம்: பேச்சில் நிதானம் தேவை. தேவையில்லாத வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரக்கூடும்.

கடகம்: திட்டமிட்ட வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

சிம்மம்: புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். தொழில் வளர்ச்சி அடையும். கடன் பிரச்சனைகள் குறைய வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

கன்னி: நீண்ட நாட்களாக தடைபட்ட காரியங்கள் சிறப்பாக முடிவடையும். பணியிடத்தில் பாராட்டுக்கள் கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான சூழல் நிலவும்.

துலாம்: சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதில் அமைதியும் தெளிவும் உண்டாகும். நிதானமாகச் செயல்படுவது நல்லது.

விருச்சிகம்: பொருளாதார ரீதியாக சிறப்பான நாள். எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

தனுசு: உத்தியோகத்தில் பொறுப்புகளும் முன்னேற்றமும் கூடும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையின் வழியில் ஆதாயம் உண்டாகும்.

மகரம்: ஆன்மீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூரச் செய்திகள் அனுகூலமாக இருக்கும். தொழில் ரீதியான அலைச்சல் குறையும்.

கும்பம்: வாகன பயணங்களில் எச்சரிக்கை தேவை. அறிமுகம் இல்லாதவர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. மாலையில் நல்ல மாற்றம் உண்டாகும்.

மீனம்: கணவன்மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். பிரிந்த நண்பர்கள் மீண்டும் இணைய வாய்ப்புள்ளது.




திண்டுக்கல் மாவட்டம், பள்ளிக் கல்வித்துறையின் சார்பில், மாவட்ட அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை இன்று (24.08.2026) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி. இ.ஆ.ப., அவர்கள் எம்.எஸ்.பி சோலைநாடார் மேல்நிலைப்பள்ளி அரங்கத்தில், குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு.ம.செல்வகுமார் அவர்கள், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவித்திட்ட அலுவலர் திரு.தி.திருப்பதி அவர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்க நிலை) திருமதி ஜெயந்தி (திண்டுக்கல்) அவர்கள், திரு.க.சண்முகநாதன் (ஒட்டன்சத்திரம்) அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# பந்துவீச்சிலும் மிரட்டும் வைபவ் சூர்யவன்ஷி... துலீப் டிராபியில் ஒரே ஓவரில் 2 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தல்



துலீப்டிராபிகாலிறுதிப்போட்டியில்ஒரேஓவரில்2விக்கெட்டுகளை கைப்பற்றி வைபவ் சூர்யவன்ஷி அசத்தியுள்ளார். துலீப் டிராபி காலிறுதிப் போட்டியில் கிழக்கு மண்டலம் மற்றும் வடகிழக்கு மண்டல அணிகள் மோதின. பெங்களூருவில் உள்ள பிசிசிஐ சென்டர் ஆப் எக்சலன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் கிழக்குமண்டலஅணி இன்னிங்ஸ்மற்றும் 210ரன்கள்வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கிழக்கு மண்டல அணியின் துணைக் கேப்டனாக களமிறங்கிய 15 வயதான இளம் வீரர் வைபவ் சூரியவன்ஷி, பேட்டிங்கில் ஏமாற்றம் அளித்தார். மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களமிறங்கிய அவர், 6 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 8 ரன்கள் மட்டுமே எடுத்து மணிப்பூர் வேகப்பந்து வீச்சாளர் பிஷ்வோர்ஜித் கொவுஜாமின் பந்தில் ஆட்டமிழந்தார். இருப்பினும், சுதீப் குமார் கராமி 146 ரன்களும், ஷாபாஸ் அகமது 167 ரன்களும் விளாசியதால் கிழக்கு மண்டல அணி முதல் இன்னிங்ஸில் 467 ரன்கள் குவித்தது. இதையடுத்து களமிறங்கிய வடகிழக்கு மண்டல அணியை முதல் இன்னிங்ஸில் 111 ரன்களுக்கு கிழக்கு மண்டல அணி சுருட்டியது. தொடர்ந்து 'பாலோஆன்' கொடுக்கப்பட்ட நிலையில், வடகிழக்கு மண்டல அணி இரண்டாவது இன்னிங்ஸில் 146 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. இதன் மூலம் கிழக்கு மண்டல அணி இன்னிங்ஸ் மற்றும் 210 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியில் வைபவ் சூரியவன்ஷியும்முக்கியபங்காற்றினார்.தனதுசுழற்பந்துவீச்சில்ஒரேஓவரில்2விக்கெட்டுகளைவீழ்த்திதிருப்புமுனையை ஏற்படுத்திய அவர், பீல்டிங்கிலும் 2 சிறப்பான கேட்சுகளை பிடித்து அசத்தினார்.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: பிரான்ஸ் வீரர் சாம்பியன்



சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் வீரர் ஆர்துர் பில்ஸ், அமெரிக்காவின் பிரான்சிஸ் டியாபோவை எதிர்கொண்டா பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஆர்துர் பில்ஸ் 63, 16, 60 என்ற செட் கணக்கில் பிரான்சிஸ் டியா போவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். இதன் மூலம் 22 வயதான ஆர்துர் பில்ஸ் 1,000 தரவரிசை புள்ளி கொண்ட மாஸ்டர்ஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இளம் பிரான்ஸ் வீரர் என்ற பெருமையை பெற்றார்.

# இந்தியாவில் டெஸ்ட் போட்டி 3 நாட்களிலேயே முடிந்துவிட்டால்..கவாஸ்கர் விளாசல்



இந்தியாவில் ஒரு டெஸ்ட் போட்டி 3 நாட்களிலேயே முடிந்துவிட்டால் விமர்சனங்கள் முன்வைக்கப்படும் என இந்திய முன்னாள் வீரர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, இந்தியாவில் ஒரு டெஸ்ட் போட்டி 3 நாட்களிலேயே முடிந்துவிட்டால், ஆடுகளங்கள், பி.சி.சி.ஐ. மற்றும் இந்திய கிரிக்கெட் குறித்து பல்வேறு இழிவான விமர்சனங்களும், மறைமுக குற்றச்சாட்டுகளும்முன்வைக்கப்படும்.இந்தஇரட்டைநிலைப்பாடு மிகவும் வெளிப்படையாக இருப்பது ஆச்சரியமளிக்கிறது. வேகப்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாத திறமையின்மையே இதற்குக் காரணம் என்ற வழக்கமான குற்றச்சாட்டு முன்வைக்கப்படும். ஆனால், வெளிநாட்டு பேட்ஸ்மேன்களால் சுழற்பந்தை எதிர்கொள்ள முடியாதபோது மட்டும் அதே கேள்வி எழுப்பப்படுவதில்லை. அப்போது அவர்களிடம் திறமை இல்லை என்று கூறாமல், ஆடுகளத்தில் இருக்கும் ஏதோ ஒரு மறைந்திருக்கும் குறைபாடுதான் காரணம் என்று கூறப்படுகிறது. என கவாஸ்கர் விமர்சித்துள்ளார். ஆஸ்திரேலியா வங்காளதேசம் இடையேயான 2வது டெஸ்ட் 2நாளில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# ரஜினிகாந்தை பார்த்ததும் அந்த பாடல் நினைவுக்கு வந்தது... கயாடு லோஹர் நெகிழ்ச்சி



விமானப் பயணத்தின்போது நடிகர் ரஜினிகாந்தை தற்செயலாக சந்தித்த நடிகை கயாடு லோஹர், அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். கன்னட திரைப்படமான 'முகில்பேட்டை' மூலம் திரையுலகில் அறிமுகமான நடிகை கயா லோஹர், தொடர்ந்து மலையாளம், தெலுங்கு, தமிழ் உள்ளிட்ட பல மொழிப் படங்களில் நடித்து வருகிறார். தமிழில் பிரதீப் ரங்கநாதன் நடிப்பில், அஷ்வத் மாரிமுத்து இயக்கிய 'டிராகன்' திரைப்படத்தின் மூலம் அறிமுகமான அவர், முதல் படத்திலேயே ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார். 'டிராகன்' படத்தின் வெற்றிக்குப் பிறகு, மலையாளத்தில் டொவினோ தாமஸுடன் இணைந்து நடித்த 'பள்ளிச்சட்டம்பி' திரைப்படமும் அவருக்கு நல்ல வரவேற்பைப் பெற்றுத் தந்தது. சமீபத்தில் வெளியான 'இதயம் முரளி' திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்த அவர், அடுத்ததாக ஜி.வி. பிரகாஷுடன் 'இம்மார்டல்' திரைப்படத்தில் நடித்துள்ளார். மேலும், இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கவுள்ள புதிய படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்த நிலையில், விமானப் பயணத்தின்போது நடிகர் ரஜினிகாந்தை தற்செயலாக சந்தித்த நடிகை கயாடு லோஹர், அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்த பதிவில், நான் இன்னும் கனவு கண்டுகொண்டிருக்கிறேனோ என்று தோன்றுகிறது!!! அவருடைய தீவிர ரசிகராக இருந்து, ஒரு விமானப் பயணத்தில் ரஜினிகாந்த் சாருக்கு மிக அருகில் அமரும் வாய்ப்பு கிடைத்தது... இது நடந்தது என்பதை என்னால் இன்னும் நம்பவே முடியவில்லை. அவரைப் பார்த்த அந்தத் தருணத்திலேயே என் மனதில் 'சுந்தரி' பாடல் ஒலிக்கத் தொடங்கியது; நான் அப்படியே ஒரு கனவுலகில் மிதக்கத் தொடங்கினேன். எவ்வளவு ஒரு அற்புதமான, எதிர்பாராத தருணம்... என் நாளே இனிதாகிவிட்டது. என்றாவது ஒரு நாள் அவருடன் இணைந்து நடிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன். என்று தெரிவித்துள்ளார்.

# கலாச்சாரம் உடையில் இல்லை, உணர்வில் உள்ளது கங்கனா விமர்சனத்துக்கு நடிகை கிருத்தி சனோன் பதில்



சமீபத்தில் நகை கடையின் ரக்ஷா பந்தன் விளம்பரத்தில் கிருத்தி சனோன்அணிந்திருந்த ஆடை சமூகவலைதளங்களில்விவாதத்தைக் கிளப்பியது. இந்தியப் பாரம்பரியப் பண்டிகைக்கான ரக்ஷா பந்தன் விளம்பரத்தில் இதுபோன்ற ஆடைகள் உகந்தவை அல்ல என 'கலாச்சார காவலர்கள்' பலர் விமர்சித்தனர். குறிப்பாக பாலிவுட் நடிகைமற்றும்பாஜகஎம்பியுமானகங்கனாரனாவத், "சகோதரனுக்கு ராக்கி அணியும்போது இப்படிப்பட்ட உடையை அணிவார்களா?. பெண்களுக்குத் தங்களுக்குப் பிடித்தமான ஆடைகளை அணியும் சுதந்திரம் இருந்தாலும், சில எல்லைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்" என விமர்சித்திருந்தார். இந்நிலையில் இந்த விமர்சனங்களுக்கு இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் கிருத்தி சனோன் பதிலளித்துள்ளார். அவரது பதிவில், "பண்டிகையின் சாரம்சம் என்பது நாம் உடுத்தும் உடையில் இல்லை. அந்த பாரம்பரியத்துக்கு நாம் அளிக்கும் அர்த்தம் மற்றும் உணர்வுகளில் தான் எல்லாமே அடங்கியிருக்கிறது. ரக்ஷா பந்தன் என்பது பாதுகாப்பைப் பற்றிய ஒரு பிணைப்பு. நானும் என் சகோதரியும் ஒருவருக்கொருவர் ராக்கி கட்டிக் கொள்கிறோம். ஒரு சகோதரன் இருப்பதால் ஏற்படும் பாதுகாப்பு போலவே எங்களால் ஒருவரை ஒருவர் பாதுகாத்து கொள்ள முடியும் என நம்புகிறோம். பெண்கள் அணியும் ஆடைகளை வைத்து அவர்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் மீதானமரியாதையைக்கணிப்பது சரியல்ல. பெண்கள்என்னஅணிய வேண்டும் என்று சொல்வதை எப்போது நிறுத்த போகிறோம்..? காலத்திற்கு ஏற்ப பாரம்பரிய உடைகளின் பாணியிலும் மாற்றங்கள் வந்துள்ளன. ஆனால், இன்றும் கலாச்சாரத்தின் மீதான மரியாதை என்பது பெண்ணின் ஆடையை வைத்தே அளவிடப்படுகிறது. பண்பாடும், பாரம்பரியமும் ஒரு பெண்ணின் மனதில் தான் இருக்கிறதே தவிர, அவளுடைய கழுத்துப் பகுதியில்" என தெரிவித்துள்ளார்.

# விஜய்யின் கடைசி படமான 'ஜனநாயகன்'.. ஓடிடியில் வெளியானது

விஜய்யின் கடைசி திரைப்படமாக உருவான 'ஜனநாயகன்' தற்போது ஓடிடி தளத்தில் வெளியாகி உள்ளது. தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக பல ஆண்டுகளாக ரசிகர்களை கவர்ந்த விஜய், தற்போது அரசியலில் முழுமையாக கவனம் செலுத்தி வருகிறார். அவர் நடித்த கடைசி திரைப்படமாக உருவான 'ஜனநாயகன்', இயக்குநர் எச்.வினோத் இயக்கத்தில் ஜூலை 23ம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது. 'ஜனநாயகன்' திரைப்படம் வெளியாவதற்கு முன்பும், வெளியான பிறகும் பல்வேறு சவால்களை சந்தித்தது. குறிப்பாக, திரையரங்குகளில் படம் வெளியான சில மணி நேரங்களிலேயே சட்டவிரோதமாக இணையத்தில் கசிந்தது. இருப்பினும், விஜய்யின் கடைசி திரைப்படம் என்பதால் ரசிகர்கள் பெருமளவில் திரையரங்குகளுக்கு சென்று படத்தை கொண்டாடினர். தமிழகம் மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் 'ஜனநாயகன்' திரைப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்ததாக கூறப்படுகிறது. இதன் மூலம் படம் உலகளவில் ரூ.350 கோடிக்கும் அதிகமாக வசூலித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில், திரையரங்குகளில் வெளியான 'ஜனநாயகன்' திரைப்படம் தற்போது ஓடிடி தளத்தில் வெளியாகியுள்ளது. ஆகஸ்ட் 21ம் தேதி முதல் ஜீ5 ஓடிடி தளத்தில் 'ஜனநாயகன்' திரைப்படத்தை ரசிகர்கள் காணலாம். திரையரங்குகளில் படத்தை பார்க்கத் தவறிய விஜய் ரசிகர்களுக்கு இந்த ஓடிடி வெளியீடு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.